உ

சிவமயம்

மேகவிடு தூது

ஆசிரியர்

கோவை கிழார்

திருக்கயிலாயப் பரம்பரைமெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் அருளாணையின் வண்ணம் திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது ஆண்டு ஆடித்திங்கள் 15ம் நாள் (31-07-2022) ஞாயிற்றுக்கிழமையன்று அருள்மிகு சாந்தலிங்கப்பெருமான் மாதக் குருபூசையான மகம் நாளன்று தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகத்தால் வெளியிடப்பெற்றது.

தவத்திரு சிதம்பர அடிகளார் நூலக வெளியீடு

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி

பேரூர், கோவை - 641010.

மேகவிடு தூது

ஆசிரியர்

கோவை கிழார்

தவத்திரு சிதம்பர அடிகளார் நூலக வெளியீடு
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி
பேரூர், கோவை - *641010.*

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் பட்ட ஆய்வாளர் - **சு.விக்னேசு**

நூலக உதவியாளர் - **வி அர்ஜுன்**

நூல் ஒளியச்சு, வடிவமைப்பு :

சௌமி அச்சகம், சரவணம்பட்டி, கோவை.

அட்டை வடிவமைப்பு :

ரூ.60 மதிப்புள்ள இந்நூல் முனைவர் **இரா.சுசீலா இராசாராம்** அவர்களின் பொருளுதவியால் வெளியிடப்படுகின்றது.

பதிப்புரை

மனித வாழ்வின் எல்லா அங்கங்களையும் பாடுவதாகத்தமிழில் இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. சங்க காலந்தொட்டு கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலும் வழக்கத்தில் இருந்த இலக்கிய வகைகளைவிடவும், பத்தி மறுமலர்ச்சி தோன்றிய பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் இலக்கிய வகைகள் பல்கிப் பெருகின. இக்காலகட்ட இலக்கியங்களைப் பத்தி இலக்கியங்கள் எனவும் சிற்றிலக்கியங்கள் எனவும் வகைப்படுத்துவர். இச்சிற்றிலக்கிய வகைகளுள், தூது எனும் இலக்கிய வகையும் ஒன்று.இது அகநூலாகவும், கைக்கிளை நூலாகவும் அமைகிறது. இத்தூது நூல் தாம் விரும்பிய தலைவனிடத்து ஏதேனும் ஒரு அஃறிணைப் பொருளையோ தோழி, விறலி போன்ற உயர்திணை உறவுகளையோ, தன்நிலையை விளக்கித் தூது அனுப்புவதாய் அமையும். இத்தகைய தூது நூல்களுள் அமைந்த மேகவிடு தூது என்னும் இந்நூலின் ஆசிரியர்நமது ஆதீனக் கல்லூரியின் முதல் முதல்வராக விளங்கிய வரலாற்றுப் பேரறிஞர் கோவைகிழார் கோ. ம.ராமச்சந்திரஞ்செட்டியார் அவர்கள் ஆவார். இவர் தமிழ்மொழிக்குப் புரிந்த இலக்கியப் பணிகள் பல. இவர்தம் கையெழுத்துப் பிரதிகளில் 600க்கும் மேற்பட்ட கட்டுரைகள், 6000க்கும் மேற்பட்ட பாடல்கள், திருக்கோயில் சிற்பங்கள் குறித்த ஆவணங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. அவற்றுள் இவரது இலக்கியத்தொகுப்பில் மேகவிடு தூது எனும் சிற்றிலக்கியமும் இடம்பெற்றுள்ளது. கையெழுத்துப் பிரதியாக இருந்த இந்நூல் தற்போது நமது ஆதீனக் கல்லூரியின் தவத்திரு சிதம்பர அடிகளார் நூலகத்தின் சார்பில் ஆடித்திங்கள் மகம் நாளன்று (31/07/2022) நூலாக வர இருப்பது மகிழ்வுக்குரியது.

இந்நூலின் புரவலர்களாகத் திருமதி முனைவர் இரா.சுசீலா அவர்களும் அவர்தம் கணவர் திருமிகு பி.எல்.ஏ.இராசாராம் அவர்களும் விளங்குகின்றார்கள். முனைவர் இரா.சுசீலா அவர்கள் நமது கல்லூரியில் தமிழ்த்துறை இணைப்பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றிய சிறப்பிற்குரியவர். பணியாற்றிய காலத்தில் பல்வேறு கருத்தரங்குகள்,

சொற்பொழிவுகள், பயிலரங்குகளை நடத்தியவர். ஏராளமான கட்டுரைகளை வெளியிட்ட பெருமைக்குரியவர். இத்தகைய சிறப்பிற்குரிய முனைவர் இரா.சுசீலா அவர்கள் இந்நூலிற்குப் புரவலராக அமைவது பொருத்தமாக அமைந்துள்ளது.

அவ்வகையில் இந்நூலின் புரவர்களாகிய திருமதி முனைவர் இரா.சுசீலா - திருமிகு பி.எல்.ஏ.இராசாராம் அவர்களும், இந்நூல் வெளிவரத் துணைநின்ற நமது கல்லூரி நூலகர் திருமதி முனைவர் சாமி.அபிராமி அவர்களும், இந்நூலை அச்சிட்டு உதவிய சௌமி அச்சகத்தாரும், இந்நூல் உருவாக உழைத்த அனைவரும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப் பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்து நான்காம் குருமகாசந்நிதானங்கள் கயிலைக்குருமணி தமிழ்நெறி வழிபாட்டுத்தந்தை தெய்வத்திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,
அன்புள்ள,
சாந்தலிங்க மருதாசல அடிகள்.

நூன்முகம்

சிற்றிலக்கியங்களுள் ஒன்றாக அமைவது தூது.இது உலா எனும் இலக்கியத்தின் தொடர்ச்சியாக அமைகிறது.சங்க இலக்கியங்களில் சில இடங்களில் தூது அனுப்பிய செய்திகள் காணப்படுகின்றன.

எகினமயில் கிள்ளை யெழிலியொடு பூவை
சகிகுயினெஞ் சார்தென்றல் வண்டு - தொகைபத்தை
வேறுவேறாய்ப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டன்
பூறிவா வென்ற தூது

என்னும் பாவின் வழியாக அன்னம், மயில், கிள்ளை , மேகம், நாகணவாய்ப்புள், தோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு என்னும் பத்துப் பொருள்களும் தூதுக்கு உரியவை எனக் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் நெய்தல் திணையில் இடம்பெறும் பாடல்கள் காமம் மிக்க கழிபடர் கிளவி என்னும் துறையே பிற்காலத்தில் தூது இலக்கியத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

தூது, தனி இலக்கிய வகையாக முகிழ்த்த காலத்தில் முதன்முதலாகத் தோன்றியது உமாபதி சிவாச்சாரியாரால் பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நெஞ்சுவிடு தூதாகும். கால வளர்ச்சியில் ஞானப்பிரகாசர் நெஞ்சுவிடு தூது, கூளப்ப நாயக்கன் விறலிவிடு தூது, கிளிவிடு தூது, தமிழ்விடு தூது முதலான தூது நூல்கள் தோற்றம் பெற்றன. மேகத்தைத் தூது அனுப்புவதாக வடமொழியில் காளிதாசர் இயற்றிய மேகசந்தேசம் என்ற நூல் விளங்குகிறது. தமிழில் மேகத்தைத் தூது அனுப்புவதாக நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் **ஆண்டாள்** பாடிய **மேகவிடு தூது** என்னும் 10 பாடல்கள் முன்னோடியாக அமைகிறது. **திருநறையூர் நம்பி** இயற்றிய **மேகவிடு தூது** தனித்த இலக்கியமாகப் பாட்டியல் கூறும் இலக்கண வரையறையில் எழுந்ததாகும். இந்த நூற்றாண்டில் **கொ.பூமிநாதன்** என்பார் **ஆலடிபட்டி அருள்மிகு முத்திருளாண்டவர் முகில்விடு தூது** என்னும் நூலைப் படைத்துள்ளார்.

நம் கல்லூரியின் முதல் முதல்வராகவும், வரலாற்றுப் பேரறிஞராகவும் விளங்கிய கோவைகிழார் அவர்கள் 1932 ஆம் ஆண்டு இந்நூலை இயற்றியுள்ளார்.இது கயிலை மலையில் உறையும் இறைவனான சிவபெருமான் மீது பத்திமை கொண்ட அடியவர் மேகத்தை தூது அனுப்பும் நிலையில் பாடப்பட்டுள்ளது.

இலக்கியங்கள் பொதுவாக இறைவனை வேண்டித் தொடங்குவது வழக்கு.ஆனால் மேக விடுதூது இலக்கியத்தில் கடவுள் வணக்கம் பாடவில்லை.மாறாக மேனங்களை வாழ்த்தி நூலைத் தொடங்குகிறார்.இது மேகமாகிய வானத்தின் சிறப்பைப் போற்றும் பகுதியாக அமைந்துள்ளது.தூது அனுப்பும் பொருளை வாழ்த்துவது இலக்கிய மரபு, எனினும் நூலின் தொடக்கத்திலேயே தூதுப் பொருளை வாழ்த்துவது இல்லை. கோவைகிழாரின் இந்நெறி, ஆதிநாதன் வளமடலின் கடவுட் செய்யுளை நினைவுபடுத்துகிறது.

கொன்றை முடித்தார்க்கும் கோபாலர் ஆனார்க்கும்
அன்று படைத்தார்க்கும் ஆளல்லேம் - இன்று
மடப்பாவையார் நம்வசமாகத் தூது
நடப்பாரே தெய்வம் நமக்கு

என்பது அச்செய்யுள். கைக்கிளைக் காதலுணர்வெய்திய தலைமகள் தூது அனுப்பும் அந்நூலிற்குக் கடவுள் வாழ்த்துப் பாடத் தொடங்கிய செயங்கொண்டார், ‘‘சிவன், மால், பிரமன் எனும் மூவரையும் நாம் தெய்வமாக வணங்கப் போவதில்லை. அத் துன்பத்தில் வாடும் நமக்காக யார் நம் தலைவனிடம் தூது செல்கிறார்களோ அவர்கள் தான் இன்று தெய்வம்’’ எனப் பாடுகிறார். நம் கிழார் பாடிய இத்தூது நூலிலும் இவ்வுத்தியைக் கொண்டு தனக்காகத் தூதுரைக்கும் மேகங்களை வாழ்த்திப் புகுந்தார் எனக் கொள்வது பொருந்தும்.

பசும்புயல்காள் வாழி பல் இனங்கள் உய்ய
விசும்புறுவீர் வாழி....

எனத் தொடங்கி ஆறு கண்ணிகள் மேகத்தை வாழ்த்துவதாகப் பேரறிஞர் பாடுகிறார்.

மேகவிடு தூது நூலமைப்பு :

சைவர்களின் முதற்தலமாகப் போற்றப்படும் கைலை மலையின்கன் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு மேகங்களைத் தூது அனுப்புவதாக ''மேகவிடுதூது'' அமைகிறது. மேகங்களை வாழ்த்துவதில் தொடங்கிக் கயிலை சென்று ஈசனை வணங்கி மேகங்கள் கூறவேண்டிய செய்திகளைச் சொல்லுவதில் இந்நூல் நிறைவு பெறுகிறது. மொத்தம் 144 கண்களைக் கொண்டு கலிவெண்பா யாப்பில் அமைந்துள்ளது.

* மேகங்களினை வாழ்த்தல்,
* மேகத்தின் பெருமைகள்
* தன் நிலை கூறித் தூது அனுப்புதல்
* தூது செல்ல வேண்டிய முறை
* கயிலை செல்லும் மூன்று வழிகள்
* தூதுச் செய்தி

என்ற பொருண்மையில் மேகவிடு தூதினைக் கோவை கிழார் பாடியுள்ளார்.

புதுமைகள்

தூது இலக்கியங்கள் பாட்டுடைத் தலைவனின் பெருமைகளை மிகுதியாகப் புகழ்ந்து, தாம் காதல் கொண்ட காரணம் கூறித் தூது செல்லும் பொருளைப் புகழ்ந்து, தூதனுப்பத் தேர்வு செய்தமைக்கான காரணத்தையும், மற்ற பொருள்களைத் தேர்ந்தெடுக்காமைக்கான காரணத்தையும் கூறிச் செல்ல வேண்டிய வழிகளை எடுத்துச் சொல்லி ''மாலை வாங்கி வா'' ''கூறாய் தூது'' என்பதாக முடிக்கப் பெறும். ஆனால் கோவைகிழார் இந்நூலில் கையாண்ட இலக்கியக் கொள்கை புதுமையாக உள்ளது.

நூல் தொடங்குவது மேகங்களின் வாழ்த்தில் தொடங்கி, மேகத்தினைப் புகழ்ந்து தலைவனது இருப்பிடம் கூறித் தன்நிலையை எடுத்துரைத்துத் தூது செல்லும் முறையை விளக்கி, கயிலை மலையை அடைவதற்கான மூன்று வழிகளையும் காட்டி, தூது சொல்ல வேண்டிய செய்திகளைச் சொல்லி

கசிந்துருகும் வண்ணமெல்லாம் காரினங்காள் சொல்லி
இசிந்துருகும் என் வகைக்கே இன்று.

என முடிந்திருப்பது தூது இலக்கியத்தின் புதுமையான நெறியாகும்.பெரும்பான்மை பாட்டுடைத் தலைவனின் சிறப்புகளைப் பேசுவதாகத் தூது இலக்கியங்கள் அமையும்.இந்நூல் மேகங்களின் சிறப்பையும், கயிலை செல்லும் வழிகளையும் விரித்துப் பாடுகிறது. தூதுப் பொருளைப் புகழ்ந்து கூறும் போது பிற பொருள்களை அனுப்பாமைக்கு காரணம் விவரிக்காது, வண்டுகளைப் போலத் தூது செல்லுங்கள் என உயர்த்திப் பாடியிருப்பது பாடு பொருளில் அமைந்த புதுமையாகும்.

தேனுண்ண விரும்பும் வண்டு சோலை மலர்களையே விரும்பும் ஆனால் அம்மலர்களில் மட்டும் தேனெடுக்காது செல்லும் வழியில் உள்ள நல்ல மலர்களையெல்லாம் ஆராய்ந்து அதில் உள்ள தேனைப் பருகும். இத்தகைய வண்டுகளைப் போல நீங்களும் தூது செல்லுங்கள். கயிலையில் வளரும் ஈசனைக் கண்டு என் நிலையைச் சொல்லுங்கள் போகும் வழியில் நல்ல சிறப்பமைந்த ஆலயங்கள் பல உண்டு அவற்றையெல்லாம் தரிசித்துக் கொண்டு நீங்கள் வேண்டிச் செல்லும் மூலமதுவான ஈசனைக் கண்டு தூதுரையுங்கள் என பிற பொருள்களை இகழாது தூதனுப்பும் மரபு மனங்கொள்ளத்தக்கதாகவும், புதுமையாகவும் அமைகின்றது. மேலும் வண்டானது தான் தேனை உண்ணவே சென்றாலும் பூவில் உள்ள மகரந்தங்களைச் சேர்த்து, மலர் காயாவதற்கு உதவுகிறது. அதுபோல் வண்டுகளிடம், ''ஈசன் அடிமலரின் வாசத்தேனினை நீங்கள் உண்டு என்னை மகரந்தமாய் அதில் சேர்ப்பித்து, என் அன்பு காய்த்துப் பழுக்க உதவுங்கள்'' என வேண்டுவதாக அமைந்த பகுதி படித்து இன்புறத் தக்கது. தூதனுப்பும் பாவனை தன்னை பெண்ணாக எண்ணுவதாய் அமையும். ஆனால் மேகவிடு தூதில் பெண்ணைப் போல் வருந்துகிறேன் என கிழார் அவர்கள் பாடினாலும் தன்னை ஆண்பாலாக வைத்தே பாடியுள்ளமையை,

ஓரன்பன் கோவையிலே உம்மைத் தரிசிக்க
கூரன்பில் உள்ளனெனக்.........

என வரும் அடிகள் காட்டுகிறது.இவ்வினிய நூலானது தமிழிலக்கிய வரிசைகளில் புதுமையானதாகவும் பல வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது.

ஆசிரியர் வரலாறு

பிறப்பு : கோவைகிழார் தேவாங்கர் குலத்தில் புகழ் பெற்ற பெருங்குடும்பத்தில் திரு. மருதாசலம் செட்டியாருக்கும் கோனம்மாளுக்கும், பிறந்த ஆண்மக்களுள் இரண்டாமவராகச் சர்வதாரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் பத்தொன்பதாம் நாள் தமிழும் இந்து சமயமும் தழைக்கும்படிக்கொங்கு நாடு செய்த புண்ணியத்தால் பிறந்தார்கள். இவருடன் பிறந்தவர்கள் இருவர் ஆண் மக்களும் அறுவர் பெண் மக்களுமாவர்.

இளமை: இவர் பிறந்த குடும்பம் மிக்க புகழுடையதாய் இறையுணர்வில் தலைசிறந்ததாய் விளங்கிற்று. இக்குடும்பத்தினருள் இவருடைய சிறிய தந்தையார் கிரிய செட்டியார் என்பவர் கோவை நகரத்துப் புகழ்பெற்ற பெரியார்களுள் ஒருவராய் விளங்கினார். இவரே கோவைகிழாருடைய பிற்காலச் சிறப்புகளுக்கெல்லாம் இளம்பருவத்தில் வித்திட்டார் எனக் கூறலாம்.இவரிடம் பெற்ற பயிற்சியாலே கோவைகிழாருக்கு இளம்பருவத்திலேயே கல்வி கேள்விகளில் ஆர்வமும், சமயத் துறையில் ஊற்றமும், பொதுப்பணி புரியும் நோக்கமும் உண்டாயின.

கல்வி: கோவைகிழார் தமது ஆறாம் வயதில் நகரசபைத் தொடக்கப்பள்ளியிற் சேர்ந்து கல்வி பயின்றார். இதுவன்றிப் பெற்றோர்கள் இவருக்குத்தனியே ஓராசிரியரை நியமித்தும் கல்வி கற்பித்தனர். பின்னர் 1899-ல் லண்டன் மிஷன் பள்ளியில் சேர்ந்து முதற்படிவம் தொடங்கி மூன்றாம் படிவம் வரை பயின்றார். 1904ல் மெட்ரிகுலேஷன் தேர்விலும் 1906-ல் ஊ. அ. தேர்விலும் வெற்றி பெற்றார். பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து 1908-ல் ஆ.அ., தேர்ச்சியும் பின்னர் நான்காண்டுகள் சட்டக்கல்லூரியிலும் பயின்று 1912-ல் ஆ. ஃ., தேர்ச்சியும் பெற்றார்.

பன்மொழிப் பயிற்சி: இவருக்குக் கோவை நகரில் புகழ் பெற்ற தமிழறிஞர்களாக விளங்கிய திரு. திருச்சிற்றம்பலம் பிள்ளை, சபாபதிப் பிள்ளை என்பவர்கள் தமிழ் அறிவு ஊட்டினர். சென்னையிலிருந்த காலத்தில் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரிடம் தமிழ்க்கல்வி பயின்றார்.

வடமொழி, தெலுங்கு, கன்னடம் ஆகியவற்றிலும் நல்லபயிற்சி உண்டு. இந்தி, உருது, மலையாளம் ஆகியனவும் அறிவார்.

தொழில் : சட்டப் படிப்பு முடித்தவுடன் 1918ல் கோவை நகரில் வழக்கறிஞராகத் தொழில் தொடங்கினார். தொழிலில் நேர்மையுடன் நடந்து பெரும் புகழீட்டினர் : 1928 முதல் ஐந்தாண்டுகள் கோவை நீதிமன்றத்தில் அபீஷியல் ரிஸீவராகப் பணியாற்றினார். இத்தொழில்களெல்லாம் இவருக்கு மன நிறைவைத் தரவில்லை. ஆசிரியத் தொழில் அல்லது ஆராய்ச்சித்தொழில் மேற்கொள்ள வேண்டும் என்பதே இவர் விருப்பமாக இருந்தது. 1940 முதல் ஓய்வு பெறும் வரை இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையில் ஓர் ஆணையாளராகப் பணியாற்றினார். தொழில் நடத்திய காலங்களில் பல நிறுவனங்களில் நிலையங்களில், கழகங்களில், பங்கு கொண்டு சொற்பொழிவுகளையும் நடத்தி வந்தார். ஓய்வு பெற்ற பின்னரும் இப்பணிகள் தொடர்ந்து செய்யப்பட்டன.

பல கழகங்களில் தொடர்பு : இளம் பருவத்திலேயே தேவாங்க சிறுவர் சபை என்ற ஒன்றைத் தொடங்கி நடத்தி வந்தார். கிராம ஊழியர் சங்கத்தில் உறுப்பினராய் இருந்து பணிசெய்தார். தனது சிறிய தகப்பனாரைப் பின்பற்றி இவரும் நகரசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பத்து ஆண்டுகள் சேவை செய்திருக்கிறார். 1918 ல் நகரசபையின் துணைத் தலைவராக ஆனார். நகரசபையினரால் மாவட்டக் கல்விச் சங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு முறை துணைத்தலைவர் பத வியும் நான்கு முறை தலைவர் பதவியும் வகித்தார். மற்றும் மத்தியக் கல்விச் சங்கம், கலால் ஆலோசனைச் சங்கம், வைத்திய ஆலோசனைச் சங்கம், கோவை தாலூக்கா சங்கம் முதலியவற்றிலும் பங்கு கொண்டு பணியாற்றியுள்ளார். ஒருமுறை மாவட்டச் சபையின் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1948,46 ஆகிய இரண்டு காலப் பகுதிகளில் பட்டதாரிகள் தொகுதியில் நின்று வெற்றி பெற்றுப் பல்கலைக்கழக உறுப்பினராக இருந்ததன்றி, அக்கடமிக் கவுன்சிலிலும் அங்கத்தினரானார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் வளர்ச்சி ஆலோசகராய் இருந்தார். கோவையில் சிறப்பாக நடைபெற்று வந்த லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளி (யூனியன் உயர் நிலைப் பள்ளி) பல

இடையூறுகளால் நின்று போகும் நிலையெய்திய போது அதன் நிர்வாகக் குழுவில் உறுப்பினராய் இருந்து அதனை உயிர்ப்பித்தார். பலகாலம் அதன் பொறுப்பினராகவும், பொருளாளராகவும் இருந்தார். தேவாங்க உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்குரிய அரிய முயற்சிகள் மேற்கொண்டார். அதன் நிர்வாகக் குழுவிலும் உறுப்பினராய் இருந்தார். கோவைத் தமிழ்ச்சங்கத்தை சிவக்கவிமணி அவர்கள் தலைவராய் இருக்க இவர் செயலாளராய் இருந்து நடத்தி வந்திருக்கிறார். சேக்கிழார் திருக்கூட்டத்திலும் இவருக்குப் பங்கு உண்டு.சென்னை கையேட்டுப் பிரதிச் சாலை, தஞ்சை சரஸ்வதி மகால் புத்தக சாலை ஆகியவற்றிலும், இவருக்கு உறுப்பினர் இடம் உண்டு.ஆங்கில அரசாங்கப் பூவியல் சங்கத்தில் இவர் ஓர் அங்கத்தினர். கோவை அரசினர் கலைக் கல்லூரிப் பழைய மாணவர் கழகத்திலும் கோவை காஸ்மா பாலிடன் கிளப்பிலும் தலைவராக இருந்தார்.இவையன்றிக் கூட்டுறவுச் சங்கம், இன்ஷூயூரன்ஸ் துறை முதலியவற்றிலும் இவர் இடம் பெற்றிருந்தார்.சுருங்கச் சொன்னால் இவர் இடம் பெறாத கல்விக் கழகமோ, பொதுப்பணி மன்றமோ, சமயச் சபையோ பொழுது போக்குக் கழகமோ, பொது மாநாடுகளோ இல்லையென்றே சொல்லலாம். எந்த ஒரு நிறுவனம் தொடங்க வேண்டுமென்றாலும் அல்லது நசித்துப் போகும் உயிரூட்ட வேண்டுமென்றாலும் அதன் நிர்வாகத்தை இவரிடம் நல்ல நிலையில் இருப்பதற்கு ஒப்படைப்பது என்பது அக்காலத்து மக்களுக்கு ஒரு வழக்கமாக இருந்தது.

அரசியல் தொடர்பு: இளமையில் சென்னையில் படித்த காலத்தில் கடற்கரையில் நடைபெற்ற தேசீய இயக்கக் கூட்டங்களுக்குச் சென்று வரும் வழக்கம் உண்டு. கோவையிலும், தேசிய சபை மாநாடு, பிராமணரல்லாதார் மாநாடு முதலியவற்றில் கலந்துகொண்டார். தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்களுள் வ.உ.சி. போன்றவர்களோடும் இவருக்குப் பழக்கம் உண்டு. காந்திஜி, குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன், துணைத்தலைவர் ஜாகிர் ஹுசேன் ஆகியவர்களை நேரில் கண்டு உரையாடியிருக்கிறார்.

இவர் ஆற்றிய அரிய பணிகள்

குலப்பணி : தன் குலத்தவர் நெசவுத் தொழில் ஒன்றிலேயே நின்று அது தழைத்தக்கால் தழைந்தும், வறந்தக்கால் வறந்தும் துன்புறுவதைத் கண்டு அத்தொழில் வளம் பெருகுதற் பொருட்டுப் பல கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தியும், மாநாடுகள் நடத்தியும், பணிபுரிந்தார். வெளி மாநிலங்களில் உள்ள தன் குலத்தவர் முன்னேற்றத்திற்கும் பல மாநாடுகளில் கலந்து உழைத்திருக்கிறார். தன் குலத்தவரில் தன்னை ஒத்த ஒரு சிலரே உயர் படிப்புப் படித்திருப்பதை அறிந்து அனைவரும் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற்காகத் தேவாங்க சிறுவர் சபை, சாரதா பாடசாலை, தேவாங்க உயர்நிலைப்பள்ளி ஆகியன தொடங்கி நடைபெறுவதற்கு உழைத்தார். இப்பொழுது இக்குலத்தவர் பலர் உயர்கல்வி பெற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர்.தன் குலத்தவர் வாழ்கின்ற இடங்களெல்லாம் நேரில் சென்று கண்டு அவர்களுக்குள்ள வசதிக்குறைவை அறிந்து நீக்குவதற்குப் பாடுபட்டார்.

பொதுப்பணி: சென்னையில் படித்த காலத்தில் சில மிஷனரிகளில் சேர்ந்து மதுவிலக்குப் பிரச்சாரம் முதலியன செய்திருக்கிறார். கோவைப் பகுதியில் கிராம ஊழியர் சங்கத்தில் சேர்ந்து ஊர்ப்புறங்களில் சுகாதாரம் பற்றி மக்களுக்குச் சொற் பொழிவுகளின் மூலமும் படக்காட்சிகளின்

மூலமும் எடுத்துரைத்தார். சிறைக் கைதிகளுக்கு மூன்றாண்டுகளுக்கு மேல் கல்வியறிவு, ஒழுக்க, சமய போதனைகள் செய்தார். வெள்ளப் பாழ், கொள்ளை நோய் முதலியன ஏற்பட்டகாலத்தில் நிவாரணச் சங்கங்கள் அமைத்துச்செயலாளராய் இருந்து ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கன.

சமயப் பணி: இவர் சமய நிலையப் பாதுகாப்புத் துறையில் ஆணையாளராக இருந்தபோது சமய நிலையங்களின் வருவாயில் ஒரு பகுதியைச் சமய வளர்ச்சிச் செலவுக்கென ஒதுக்க வேண்டுமென்றும், அதைக்கொண்டு சமயச் சொற்பொழிவுகள், நூல் வெளியிடுதல், நூல் நிலையம் அமைத்தல் முதலியன செய்ய வேண்டுமென்றும் திட்டம் வகுத்தார். கோவில்களில் திருமுறை

ஓதுதல், எழுதுதல் முதலியன செய்வித்தார். பல புலவர்களைக் கொண்டு தல வரலாறு முதலியன எழுதுவித்து அவர்களுக்கு ஊதியமும் கிடைக்க வகை செய்தார். சமயச் சொற்பொழிவாளர்கள் பலரை நியமித்தார். ஆலயக் கும்பாபிடேகங்கள் ஆகம முறைப்படி நடக்க வேண்டும் என்பதில் ஊற்றமுடையவராய் இருந்தார். கும்பாபிடேகங்களை முன்னின்று நடத்துவதற்கு சிவக்கவிமணி. சுப்பிரமணிய முதலியாரவர்களையும், சிவ ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்களையும் அனுப்பி வைப்பார். இங்ஙனம் நடத்தப்பட்ட கும்பாபிடேகங்களுள் குறிப்பிடத்தக்கவை, திருவாரூர், திருநெல்வேலி, திருச்செந்தூர் ஆகிய தலங்களில் நடைபெற்ற கும்பாபிடேகங்களாம். இவையெல்லாம் இத்துறையில் இவர்க்கு முன் ஒருவரும் செய்யாதன. சமயச் சான்றோர்கள், இச்செயல்களைப் பெரிதும் வரவேற்றனர். ஓதுவார்களிடத்தில் இவருக்குத் தனியான அன்பு உண்டு. கோவில்களுக்கு வரும்பொழுதெல்லாம் ஓதுவார்களுடைய பாடல்களை ஊன்றிக் கேட்பார். அவர்களுடன்அன்பொடு அளவளாவுவார். தமிழில் அருச்சனை செய்யும் முறையையும் தொடங்கினார். பதவிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் *21-8-61*-ல் குன்றக்குடி அடிகளுடன் சேர்ந்து சென்னை முதலமைச்சரைக் கண்டு தமிழ் நாடெங்கும் தமிழில் அருச்சனை செய்யப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தினார். சேக்கிழார் திருக்கூட்டத்தில் அங்கம் வகித்துச் சிவக்கவிமணி அவர்களுடன் கேரள நாட்டுத் திருவஞ்சைக் களத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனார், குருபூசை நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வெற்றி பெற்றார். சைவசித்தாந்த சமாஜத்தில் பங்கு கொண்டு பல பணிகள் ஆற்றியிருக்கிறார்.

கல்விப் பணி: மாவட்டக் கல்விச் சங்கம், மத்திய கல்விச் சங்கம் ஆகியவற்றில் தலைமைப் பதவி வகித்த காலத்தில் தொடக்கக் கல்வி முறையைச் சீர்திருத்தி அமைத்தார். அதிகமான பள்ளிக் கூடங்கள், தொடங்க ஏற்பாடு செய்தார். ஆசிரியர்களின் பொருளாதாரத்தில் அதிகக் கவனம் செலுத்தினார். அடிக்கடி ஆசிரியர் சங்கக் கூட்டங்களைக் கூட்டி ஆசிரியர்களின் நிலைமையை அறிந்து உயர்கல்வி அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும், தெரியப்படுத்தினார். ஆசிரியர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பாடுபட்டார். பதவியிலிருந்து நீங்கியபின்

பல கல்விக் கூடங்களின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராய் இருந்து நடத்தி வருகிறார்.

கோவை மாவட்ட நாலகக் குழுவின் தொடக்க காலத்தில் தலைவராய் இருந்து சிறந்த முறையில் நாலகம் உருவாவதற்கும் பல கிளைகள் தோன்றுவதற்கும் அரும்பாடு பட்டார். இதில் ஐந்தாண்டு காலம் தலைவராய் இருந்தார்.

தமிழ்ப் பணி: இவர் கல்லூரியில் பயின்றது பௌதிகமும், சட்டமுமே என்றாலும் தமிழ் இலக்கியத்தில் நல்ல புலமை தனியே பெற்றிருந்தார். உரை நடையாகவும், செய்யுளாகவும் பல நூல்களை ஆக்கியுள்ளனர்.ஆங்கிலக் கட்டுரைகள், கவிதைகள் பலவற்றை மொழி பெயர்த்திருக்கின்றார். பல சபைகளில் தமிழின் பெருமைகளை விளக்கிப் பேசியிருக்கிறார். தமிழ்

நாட்டின் வரலாறுகளையும் புலவர்களின் வரலாறுகளையும் கல்வெட்டினைக்கொண்டு ஆய்ந்து தெளிவு செய்துள்ளார்.

தமிழ்க் கல்லூரி: தமிழகத் தமிழ்க் கல்லூரிகளுள் மயிலம் கல்லூரியும், தருமபுரம் கல்லூரியும் தோன்றுவதற்கு இவர் பெரிதும் உதவியாய் இருந்தார். 1953ல் பேரூர் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் திருமடத்தின் இளையபட்டமாக இருந்த தவத்திரு.சாந்தலிங்க இராமசாமி அடிகள், தமிழ்க்கல்லூரி ஒன்று தொடங்க விரும்பி இவருடன் தொடர்பு கொண்டார்.இவர்க்கும் கொங்கு நாட்டில் ஒரு தமிழ்க்கல்லூரி தொடங்க வேண்டும் என்னும் எண்ணம் முன்னரே இருந்தது. இதுவே தக்க சமயம் என்று மகிழ்ந்து திரு.ரா. க. சண்முகஞ்செட்டியார் அவர்களையும் திரு. நா.மகாலிங்கம் அவர்களையும் அணுகி இதுபற்றி உசாவினார்.பின்னர் திரு.வெ.சி.சுப்பைய கவுண்டர் அவர்களும் இதில் கலந்து கொண்டார்.சுப்பைய கவுண்டரும், கோவை கிழாரும், முன்னரே சாந்தலிங்கர் திருமடத்துடன் தொடர்புடையவர்கள் பெரும் பொருள்கள் திரட்டப்பட்டன. பேரூர்த் தமிழ்க்கல்லூரிக் கழகம் என்னும் பெயரில் ஒரு கழகம் நிறுவப்பெற்றது. இதில் கோவைகிழார் செயலாளராய் இருந்து பணியாற்றினார். பல்கலைக் கழகத்தாருடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று 1953ஆம் ஆண்டில் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் தமிழ்க்கல்லூரி தொடங்கப்பெற்றது. தொடக்கத்தில் கோவைகிழார் அவர்கள் கல்லூரி முதல்வராகவும்,

பொருளாளராகவும் இருந்து பணியாற்றினார். பின்னர் இவர் கல்லூரிக் கழகத்தின் துணைத் தலைவராக இருந்தார்.

இவர் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல செல்வரிடம் சென்று பொருள் வேண்டிப் பெற்றார். கழகத்திற்குச் சந்தா செலுத்தும் உறுப்பினர்களை மிகுதியாகச் சேர்த்தார்.கல்லூரிக்குத் தகுந்த கட்டிடங்கள் கட்டுவதற்கும், மாணவர்களுக்கு உணவு விடுதி வசதியளிப்பதற்கும், அரிய முயற்சிகள் மேற்கொண்டார். ஏழை மாணவர்களுக்குப் பல செல்வர்களிட மிருந்து உதவி வாங்கிக் கொடுத்தார்.கல்லூரியில் கொண்டாடப்பட்ட தனது பிறந்த நாள் விழாக்களில் நல்ல நூல்களை வழங்கினார். கல்லூரி நூலகத்திற்குத் தனது சொந்த நூல்களிலிருந்து ஆயிரக்கணக்கான நூல்களையும், பல அலமாரிகளையும் வழங்கினார். மற்றும் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் முயற்சியும் மேற்கொண்டார்.

திருமடத்தின் சார்பில் உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்கும். இவர் மிக உதவியாய் இருந்தார். மற்றும் சிரவணபுரம் கௌமார மடாலயத்தில் நடைபெறும் விழாக்கள் பலவற்றிலும் கலந்து சிறப்பித்திருக்கின்றார். இளமைப் பருவம் முதலே இம்மடாலயத்திற்கு இவர் வந்து போவது வழக்கம். இவ்விரு திருமடங்களின் வளர்ச்சியிலும், இவருக்குப் பெரிதும் ஆர்வம் உண்டு.

இதழாசிரியர் : இவர் கோவைத் தமிழ்ச் சங்கத்தில் செயலாளராய் இருந்த காலத்தில் 'கொங்கு மலர்' என்னும் மாத இதழுக்கு ஆசிரியராக இருந்து 1934 முதல் 37 வரை நடத்தி வந்தார். இதில் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.அவற்றுள் சில புத்தகங்களாக வெளியிடப்பட்டன. சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தின் பத்திரிகையான சித்தாந்தத்திற்கு 1947 முதல் 58 வரை ஆசிரியராக இருந்து நடத்தினார். இவர் ஆசிரியராய் இருந்த காலத்தில் பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகளைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு தலைப்பிலும் அதற்கேற்ற கட்டுரைகளாகத்தேர்ந்து வெளியிடும் பழக்கத்தை மேற்கொண்டார்.

இவரும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவ்வகையில் சித்தாந்தம் பத்திரிகை சுவை மிகுதியுடையதாய் விளங்கிற்று.சந்தாதாரர்களும் பெருகினார்கள்.

பதிப்பாசிரியர் : சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தக சாலையில் உறுப்பினராய் இருந்து சோழன் பூர்வ பட்டயம், கொங்குதேச ராசாக்கள், பேரூர்க் கோவை ஆகிய நூல்களையும் தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் உறுப்பினராய் இருந்து இராமப்பய்யன் அம்மானை என்னும் நூலையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வழியாய்த் தமிழிசைக் கருவிகள் என்னும் நூலையும் பதிப்பித்திருக்கின்றார். இராமப்பய்யன் அம்மானை என்னும் நூல் பதிப்பைப் பத்திரிகைகள் எல்லாம் நன்கு மதித்துப் பாராட்டின. தமிழிசைக் கருவிகள் என்னும் நூலுக்குப் பல படங்கள் ஈட்டிக் கொடுத்துள்ளார்கள்.

நூலாசிரியர் : இவர் எழுதியுள்ள சிறு கட்டுரைகள், ஆராய்ச்சிகள், வரலாறுகள், பயண நூல்கள், செய்யுள் நூல்கள் கணக்கிலடங்கா. பல அச்சிட்டு வெளியிடப்பட்டன. வெளிவராதன மிகப்பல.தான் எழுதியவற்றை ஒழுங்காகத் தொகுத்து அட்டை கட்டி 40 தொகுதிக்கு மேல் வைத்திருக்கின்றார். இவையெல்லாம் வெளியிடப்படுமாயின் தமிழ் மக்கள் பெரிதும் பயனெய்துவர். அரிய செய்திகளையும், எளிய நடையில் மிகத் தெளிவாக எழுதும் ஆற்றல் இவருக்குண்டு. இவ்வகையில் எழுதியுள்ள சிறுவர் சிவஞானம் என்னும் நூல் குறிப்பிடத்தக்கது.சைவ சித்தாந்தத்தை மிக அழகாகச் சிறுவர்களும் உணர்ந்து கொள்ளும்படி எழுதியிருக்கிறார். இவர் எழுதிய நூல்களுள் 'கொங்கு நாட்டு வரலாறு' என்னும் நூல் பெரும் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது. இதனை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது. தனது வரலாற்றையும் செவ்விதின் எழுதித்தொகுத்து வைத்திருக்கின்றார். இவரெழுதிய நாட் குறிப்புக்களின் தொகுப்பு 40க்கும் மேல் உள்ளன.

கோவைகிழார் இயற்றிய

மேகவிடு தூது

மேகங்களை வாழ்த்தல்

பசும்புயல்காள்வாழிபல் இனங்கள் உய்ய
விசும்புறுவீர்வாழிவிரும்பிச் - சிசுமுதலாம்

முத்தோரும்வானமுகம்பார்த்துவாரீரென்று
ஏத்தோதும் வண்மை எழில்வாழி - பூத்துவரும்

பைஞ்சடியும்பைங்கொடியும்பல்மரமும்புல்லினமும்
மெய்செழித்தோங்கமிகவாழி-ஐயறிவில்

ஓடிப்பறப்பனஊர்ந்து நடப்பன
கூடி எதிர்கொள்குணம் வாழி - நாடி

நலமுய்யசிற்றுயிர்கள் நன்கியங்கத்தேடி
வலமுய்யநும்நிலைவாழி - சலம் பெருகி

ஊற்றும்குளமும் உயர்நதியும் கேணிகளும்
தோற்றும் முதற்கண்துணைவாழி - போற்றி

மேகத்தின் பெருமைகள்

நிலத்தில் அசைவனநிற்பனவெல்லாம்
நலத்தில் மிகநும்மைநாட - வலதலவோ

அவ்வண்ணம்மா உயிரின் அல்லல்கள் தீர்ப்பதனை
எவ்வண்ணம் கொள்வீரோ என்னிடமும் - நவ்வும்

குணத்தில் பெரியார்குறையுடைமக்கட்
குணவிடற்குநீர்தான் உவமை - கணமதிலே

மூரிக்கடல் நீர்முகந்துநீர்காண்டு
வாரி இறைத்து வளம் பெருக்கிப் - பூரிப்பீர்

உப்பே உவர்க்கும் உவர்நீரை உட்கொண்டு
துப்பேதும் இல்லாததூய்நீராய் - மெய்ப்பிப்பீர்

மேகத்திடம் தன்நிலை கூறி வேண்டல்

குற்றம் செய்வானைக்குணவானாய்மாற்றுமொரு
முற்றுமுழுஞானம்முற்றிடுவீர் - சற்றும்

கடைதேராநாயேன்கடைதேறும் வண்ணம்
நடையேனும்மாற்றி நலந்தந் - தடைவிப்பீர்

சீர்கெட்ட என் நெஞ்சுசீராகும் எண்ணத்தே
வேர்கட்டமாமரம்போல் வீழ்ந்தானைச் - சார்வண்ணம்

மெய்யறிவுதந்தென்னைமெல்லியல் போல் நின்றுருகப்
பொய்யறிவுபோக்கிப்பொலஞ்செய்வீர் - செய்யதிரு

மேனியினைத் தீண்டியேமெய்ச்சிலிர்ப்புப்பெற்றுய்யத்
தீனியிலாநாய்போல் திகைத்துளனே - ஏனெனிலோ

தூது செல்லவேண்டல்

ஈசன் உறைவிடமோ எட்டாதகைலைமலை
பாசம் அதை அணுகப்பண்டடைந்தும் - வீசமுமே

அண்டாததன்மையுளேன் அண்ணாந்து. கொட்டாவி
கொண்டால் பயனுளதோ கொண்டல்காள் - விண்டால்

பயனுண்டிதையறிந்தேபன்னிப்பணிந்தேன்
தயவுண்டேல் என்றனக்காத் தாண்டிச்- செயலுறுவீர்

ஈசன் அடிகட்கே ஏறிப் பறந்திட்டு
வாச மலர்ப்பாதம் வந்தித்தே - ஆசையுடன்

ஓரன்பன் கோவையிலே உம்மைத் தரிசிக்கக்
கூரன்பில் உள்ளனெனக்கூறிடவே - பேரன்பு

மிக்கு விடைதருவீர் மேன்மையுறும் - கொண்டல்காள்
தக்க மனுவேற்றித் தங்கிடுவீர் - நக்கிடுமோ

வண்டினைப்போல் தூது செல்லுங்கள் எனல்

தேன்வண்டு சோலைவாய்த் தித்திக்கும் பூக்களையே
வான்வந்து வட்டமிட்டு வந்திக்கும் - தான்வந்த

நோக்கத்தே பூவின்கண்நோகாது போந்தருளி
ஊக்கத்தே தேனினையும் உண்டிடுமே - ஏக்கம்

சிறிதின்றி மற்றுமொரு சீர்மலரை ஆய்ந்து,
வறிதின்றி தேன்குடித்தே வானில் - பிறிதின்றிப்

போவதுபோல் நுவ்விரும் போந்தருள்வீர் என்வகைக்காய்
ஆவதுவும் ஆங்காங் கார்கள் போல்-வாவியுடன்

ஆலயங்கள் உண்டாம் அவற்றைத் தரிசித்துக்
கோலமய ஈசன் குளிர் அருளின் - மூல

மதுவினையே உண்டிடுமின் மாசில்லா மாண்பில்
மதுவுறிஞ்சக் காய்செயுமம் மாட்சி - யதுபோல

நீவிர் எனதன்பை நீவிர்காண் ஆலயத்துக்
கோவிடத்துப் பாதத்தே சேர்த்திடுமின் - தாவிப்

பெருமலராம் கைலைப் பெருவள்ளல் காட்டும்
திருவடியின் தேனைத் தெவிட்டப் - பருகி

மகரந்தம் சேர்ப்பது போல் மாவள்ளல் என்னை
நுகரிடவே நேராய் நுழைப்பீர் - பகரறிய

அச்செயலைச் செய்திடுவீர் ஆயின் பரிசெதுவும்
இச்செகத்தில் யாண்டும் இணையில்லை - மெச்சியே

இத்தொழிலைக் கைக்கொள்மின் ஈசனுறைக்கைலையிலே
சித்தத்தை வைத்திட்டால் சீருறுவீர் - மொத்தத்தில்

கயிலை மலைக்குச் செல்லும் வழி கூறல்

மூன்று வழியுண்டு மூன்றிலும்தான் ஒன்றினையே
ஊன்றி எடுத்திடுமின் உள்ளத்தே - தோன்றும்

உயர்வழியின் காட்சிகளை ஊட்டிடுவேன் கேண்மின்
அயர்வின்றிச் சோம்பின்றி ஆய்ந்தால் - துயர் நீங்கும்

முதல் வழி

முவ்வழிகள் தம்மில் முதல் கூறும் மேற்றிசைப்பால்
செவ்வியதோர் பாதையலே சேர்ந்திடுமின்- அவ்வழியில்

காணும் திருக்காட்சிக் கண்டிடவே முந்துறுமின்
பேணும் முதற்தலமோ பேரூராம் - ஊணும்

உறக்கமுமே வேண்டாம் உயர்பொன்னின் கூடம்
துறக்கமுமே காணாத் துணியில் - பறக்குமே

ஆங்கிருக்கும் ஓவியங்கள் ஆங்கிலரும் சுல்தானும்
ஓங்கிடவே மெச்சி உருகிடுவார் - ஆங்கோடும்

காஞ்சி நதிக்கரையில் கண்வளரும் தெங்கினங்கள்
நாஞ்சில் எனவமைந்த நன்குடைத்து - வாஞ்சனையே

மேலிட்டிருகாதம் மேற்சென்றால் ஐம்மலைகள்
வேலிட்டான் வில்போன்று வேய்ந்திருக்கும் - தூயத்

துயர்நீக்கும் வெள்ளிமலைத் தொல்லோங்கல் மக்கள்
அயர்நீக்க ஏழ்குன்றோ டாங்கண் - உயர்ந்திருக்கும்

ஐம்பூத லிங்கங்கள் ஆங்குண்டவற்றினையே
மொய்ம்போடு கண்களித்து முன்செல்மின் - மெய்மை

மலையாள நாட்டின் மழையினங்கள் உம்மை.
தலையாலே ஏற்றிடுவர் தங்கி- மலையடர்ந்த

மேற்கடல் வாய்மங்களூரில் மேற்கதிர் ஏழூற்றின்
பாற்களிநீர்ஆடிப் பரிந்திடுவீர்- நாற்கரையைக்

கண்டவாய் மேன்மைக் கலையாய்ந்த வல்லமணர்
பண்டடைந்த கார்க்கல் பழையுருவம் - அண்டைக்

குமதேசன் நெட்டுருவக் கோலத்தைக் கண்டு.
நமதீசர் ஆங்கும் நமைப்போல் - அமணர்க்கும்

நன்றிசெய் நிற்கின்றான் நாமும் வழிபடுவோம்
என்றுருகி ஏத்தி இனிவடபால் - சென்றிடுமின்

கோகர்ணக் கோலமுடைக் கோபுரமும் உந்தம்மை
ஆகருகித் தண்டை அடைவிக்கும் - மோகமுடை

மாவலியார் சிற்றுருவில் மக்களெலாம் தாந்தொட்டு
போம்வலியைப் போக்கடிக்கும் போக்களிப்பர் - காவலிலா

மேற்கடல் வாய் கால்வைத்து மெல்லியலார் உட்படவே
கோறகட்டி வீழ்த்திக் கொலை புரிந்த - போற்சுகல்

நாட்டார் அரசாளும் நற்கோவா கோவில்கள்
வேட்டாதருவருப்ப மேன்சென்றால் - ஈட்டாத

செல்வம் இயங்கிடும் ஓர்சீர்நகரம் பம்பாயின்
பல்வளமும் மில்வளமும் பாங்காகச் - சொல்வளத்தோ

டூக்கி உணர்ந்தே உளம்கலித்துப் பின்னதனை
ஆக்கி அளித்த அரசிதனை - நோக்கியே

சிந்தாச் சிறப்பெல்லாம் சின்னாளில் தந்திட்ட
எந்தாயே மாயாம்பா என்றேத்தி - முந்தோடிப்

பன்னிரண்டு சோதி பகர்லிங்கத் தொன்றாகி
முன்னர் முகம்மதியன் போரிட்ட - சன்னிதமாம்

சோமேசம் சென்றடைந்து சோபனமும் பெற்றடைந்து
காமேசன் கண்ணன் கவிநகரம் - பூமேவும்

பண்டைத் துவரா பதியடைந்து கார்வண்ணன்
கொண்டைத் திருமேனிக்கோலத்தை - வண்டெனவே

மொய்த்து நலமதில் முயங்கிப் புறஞ்செல்மின்
வைத்த நதிப்பெயரை வான்பெயாரல் – உய்த்துள்ள

சிந்துமக நாட்டின் சின்னங்கள் கண்டேகி
முந்திபிரமநகர் முன்னாளில் – உந்தும்

மணல்மேட்டுள் மூடி மணற்றிடலாய் ஆன
குணம் தேர்ந்து மக்கள் போல் கூடும் – கணத்தினிலே

நாடும் நகரும் நசித்திடுதல் கண்டிடுவீர்
ஓடும் நதியைந்தும் உள்ளடக்கி – பீடுடைய

பாஞ்சால நன்னாட்டுப் பான்மையினை நன்கறிந்து
தீஞ்சாரக் கசல்கழனி தேன் சொட்ட – வாஞ்சனையும்

மேற்கொண்டயல் நாட்டு வேற்றரசர் வந்தடைந்து
கோற்கொண் டணைத்திட்ட கோலத்தை – நாற்புறமும்

இந்நாளும் காணும் இழிதோற்றம் அங்குளது
பின்னாளில் சீக்கியர்கள் பேணிவர – அன்னாரைத்

தெல்லிமுகலாயர்தேராதமிழ்த்திருந்தும்
சல்லியளவும் சரிப்படுத்த – வல்லையில்லர்

சீக்கியரோநாடாளும் சீரெய்திமுன்னின்று
ஆக்கினரேபொற்கோயில் ஆங்கொன்று – நோக்கியதன்

நல்லமிர்தவாவியெனும் நற்பெயரைப்போற்றிப்பின்
சொல்லமிர்தநாடென்று சொற்கவிஞர் – பல்லமிர்தச்

செய்யுளிலே பாடிமகிழ்ச்செந்நிலஞ்சூழ்காஷ்மீரச்
செய்களிலும் பள்ளச்செழுஞ்சாரல் – ஒய்யார

ஏரிகளோடாற்றின் எழில் அனைத்தும் கண்டுவந்து
தேரினவாய்மாமலைகள்திக்கேகி – நேரில்

பனிவரையின்பல்குவடும்பாய்ந்தோடிச் சேர்ந்து தனிவரைகள்
மத்தியிலேதாழும் – மனசரசின்

தெள்ளமுதைக்கண்பருகித்தேர்ந்தருளிப்பக்கத்தே
ஒள்ளமுதாம்கைலை ஒளிகண்டு - வெள்ளித்

தனிப்பெருமைக்கோட்டில் தாணுவினை நண்ண
நனிப்பெரிய அன்புடனே நாட்டம் - கனிந்திருக்கும்

நெஞ்சினிலே கொண்டலராய்நேர்க்குவடுமேலேறி
அஞ்சலிடும் ஆண்டவனை அர்பரித்துக் - கெஞ்சிடுவீர்

இரண்டாம் வழி

இவ்விதமாய் மேற்றிசைக்கண்ஏகிடவே ஒவ்வாது
செவ்வியதோர் வேறொன்றைத் தேர்ந்தெடுப்பின் - திவ்வியமாய்

மத்தியிலோர்நேர்வழியும் வாய்த்திடுமே கேட்டிடுமின்
அத்திசையின் பண்புரைப்பன் ஆராய்ந்தே - சித்திதரும்

கோவைவிடுத்தவுடன் கொள்ளின் வடதிசைக்கண்
பாவைபவானிபடிந்திருப்பாள் - சோபைதரும்

நீல்வண்ணன்பருவதமாம் நீலகிரிஎய்திடவே
பால்வண்ணர்மேற்றிசையார்பான்மையினை - வால்வண்ணர்

போல் நமர்கள் மெய்யழியும் போக்கறிந்து வாழ்வதிலே
கால் நலமும் பெற்றாரோகாணிடுவீர் - கோல் நட்டுப்

பாய்கரையின் நீர்வீழ்ச்சிப்பாங்கரிலேமின்சாரம்
தீகரைய ஆக்குவதும் தேர்ந்திடுவீர் - நோய்கரையும்

நஞ்சன்குடிபுக்குநாயன்மார்மூவொன்பான்
செஞ்சொல்அடியவரைச்சேவித்துக் - கஞ்சமலர்க்

காரணனார் சேவடியும் கப்பினிநல்லாற்றினையும்
பூரணமாய்க்கண்டுவந்துப்பூரித்து - தோரணங்கள்

போலொளிசூழ்சாமுண்டிப்பொன்சிகரச்சீர்கண்டு
கோலமயச்சத்தியினைக் கொண்டாடிக் - காலத்தின்

அற்புதமோமானுடன்றன் ஆற்றலுமோநம்நாட்டுச்
சிற்பிகளின்கைத்திறமோசீர்வளர் – உற்பவிக்கும்

மைசூரின் தற்காலமாமகிமைகாணுங்கால்
மெய்சூரர்பண்டையரும்மெச்சிட்டுக் – கைசோர்வர்

காவிரிவாய்ச்சீரரங்கன்கற்றளியும் போர்மன்னர்
தீவிரமாய்த்தண்டெடுத்ததிண்ணயிலும் மேவியபின்

வெள்ளைக்கல் மேல்நிற்கும் விண்செல்லும் பேருருவம்
குள்ளையராய்மானிடரைக்கொண்டிறக்கித் – தள்ளிடுமோர்

வல்லமண ஆதிக்கம்வாய்ந்துளதைக்காணிடுவீர்
சொல்லவரும் அத்துவைதச்சோதியுமே – நல்ல

சிருங்கேரிச்சங்கரரின் சீர்மடத்தில் துங்கம்
ஒருங்கேகிப்பாய்வதுபோல்ஓங்கும் – மருங்கேகிப்

பம்பாநதிக்கரையில் பண்டைபெருமன்னர்
தம்போல்நிலவுலகைத்தாங்கிடுவோர் – நம்பாரில்

உண்டோ எனவியக்கும் உண்மைப்பெருமையினைக்
கண்டோர் மகிழ்வுறுமக்காட்சிகளை – அண்டி

அணுகில் மகிழ்வோஅகன்றோடும் தீயர்
நணுகி நொருங்கிநசித்துத் – துணித்திட்ட

சிற்பக்கலைஞானச்சீர்கண்டால் சீறிடுவீர்
அற்பர் அறிவின்மைஆங்கறிவீர் – நிற்க

அதுவெல்லாம் செய்தவர்கள் அண்டை இருக்கும்
விதியில்லாஊராம்விஜாப்பூர் – மதியில்லாக்

கோலகொண்ட என்பனவே கோலமுடைமாளிகைகள்
சாலவுறும் செல்வமெலாம் சார்ந்திருந்தும் – சீலம்போய் (‘சீலமழிந்து)

அன்னார் தொலைந்தனரே ஆக்கல் அழிதலுமே
முன்னாலே தாம் செய்வினைப்பயனே – என்பீரால் (‘தாம்வினைமுற்பயனே)

பண்டரீநாதன் பரிந்திழுப்பான்பார்சனத்தை
கொண்டல்காள்நும்மைமே கூப்பிடுவான் - வண்டுகளைப்

பூவிழுத்துத்தேன் தறல் போல் பொன்னுளத்தான்
ஆவிகளைத் தாவி அருள்சுரப்பான் தாள் தந்தே - ஓவியங்கள்

எண்ணவொணா அற்றலிலே எல்லோராத்தண்குகைகள்
வண்ணமொடுகாண்பீர்வகையிருப்பின் - அண்ணலமர்

பீமாத்தலையிடமும்பீடுசார்க்கௌதமியின்
தேமாவளர்த்தடமும் தேசுடைய - சீமான்

இருமுருவம் கொண்டிருக்கும் ஈராறுள் உள்ளவையே
கருமுருவின்சூர்ப்பனகைக்கண்டித் - திருந்தவொரு

நாசிக்கெனுதலமும்நர்மதையில் ஓங்காரத்
தேசுடையலிங்கமுமே தேரிடுவீர் - பேசரிய

உச்சினியில் மாகாளம் ஓர் சோதிலிங்கமுமாம்
நச்சிடுமூர்விக்கிரமன் நன்னகராம் - மெச்சும்

ஜயபுரியில் பல்லுடுக்கள் சார்பியலைக்காட்டும்
இயந்திரத்து மந்திரமும் ஈங்குண் - டுயர்ந்த

வடமதுரைக்கண்ணன் வகுத்திட்டமாய
இடமதுவாம் கோகுலமும் ஈங்கண் - வடக்குறுமே

வானார் பிருந்தாவனத்தேதளிபல உண்
டானால் தமிழ்நாட்டோர் ஆலயமோ - மேனோக்கும்

முன்னம்மை ஆண்டமுகமதியர்சிற்பமெலாம்
நன்னகர்கன் ஆக்ராநவடெல்லிச் - சின்னத்தே

தோற்றிடுமால் ஆங்குள்ளதூயப்பளிங்கெல்லாம்
சாற்றிடுமால் விஞ்ஞானச்சார்பெல்லாம் - ஈற்றினிலே

பீடுடைய ஊராம்பிரயாகைக்கூடலிலும்
தோடுடைய அண்ணல்துயர்நீக்க - நீடுடைய

கங்காந்திக்கரையில் காசித்தலத்தினிலும்
பங்கேருகத்துடனேபாலிப்பர் - நங்கள்

அருங்கங்கை ஆர்க்கும் அரித்துவாரஞ்சென்று
பெருங்கற்கள் மேலேறிப்பின்னர் - மருங்குள்ள

மாமலை சூழ்கேதாரம்மாப்பதரிகாசிரமம்
ஏமஞ்சார்கங்கோத்ரியமனோத்ரி - நாமஞ்சும்

தண்மலைகள் மேலேறித்தாண்டிப்புறஞ்சென்றால்
வண்மலியும் ஏரிமனசரசைக் - கண்களித்துக்

கைலைமலையடியைக்கண்டிடுவீர்மேலே
எயிலையுடைவேந்தை ஏத்திடுவீர் - சைலப்

மூன்றாம் வழி

பெருமானைச்சேர்ந்திடவேபின்னுமொருசார்பில்
தெருமாறிச்செல்வழியைத் தேடித் - தருவன்யான்

கீழாகச்சென்று ’கிழவடலாய்ஆர்கலிபால்
தாழாது செல்லில் தயங்கிலதாய் - சூழவரும்

அவ்வழியில் தீர்த்தம் அடுத்தடுத்தே உள்ளனவால்
திவ்வியமாய்ஏகிடுவீர்தேர்ச்சியுடன் - அவ்வழியில்

கொங்கேழ்த்தலமுண்டு கோவைநகர்விட்டால்
மங்காஅவிநாசிமாகுளத்தே - அங்கோர்

முதலைவாய்ப்பிள்ளைமுழைவாயைவிட்டுக்
குதலைவாய்ச்சொல்லால்குலாவி-மதலையான

அற்புதத்தைக்கண்டும் அருண்முருகன்பூண்டியிலே
விற்புறத்தேவேடர்விறட்டிடவும் - நற்றொண்டர்

தந்தபொருள் ஆறலைக்கத்தாம்பாடிமீண்டதுவும்
அந்தமுடன்காவேரிவானியுடன்- சந்திக்கும்

கூடலிலேசம்பந்தர்கூறின கேட்பதுவும்
பாடலிலேசெங்குன்றில் பாய்ந்தசுரம்-வீடினதும்

பாண்டிக்கொடுமுடியில் பஞ்சாட்சரப்பதிகம்
வேண்டியளித்ததுவும்வீடடையத் - தூண்டும்

கருவூரில்சித்தர்கலைசேர் இசைப்பா
திருவூரப்பாடித்திகழ்ந்த - பெருமையையும்

வெஞ்சமாக்கூடல் விகிர்தேசன்சந்நிதியில்
தஞ்சமாங்குண்டெனத்தாழ்வதுவும்- கெஞ்சிடுவீர்

முன்னர்ப்புனல்நாட்டு மூவாத்தலம்கடந்துப்
பின்னர் நடுநாட்டைபேணிடுவீர் - மன்னுதிரு

தொண்டைவளநாடு தோன்ற அது நீங்கி
அண்டைவடநாடு அணுகிடுவீர் - பண்டை

அகமெல்லாம்காண்கையிலேஐம்பூதலிங்கத்
தகவெல்லாம் தேர்ந்திடுவீர்தாமோ - மிகப்பெரும்சீர்

ஆனைக்காகாளத்தி அண்ணாமலைத்தில்லை
ஏனைக்காஞ்சீபுரமாம் இத்தலங்கள்- கானத்

தகோபிலமும்சீசைலத்தர்ச்சுனமும்தாண்டி
மகோததிசேர்சீகிருஷ்ணைமாசில் - சுகோதயமாம்

கோதாவரியாகும்குளிர்நதிகள் கண்களித்துச்
சீதக்கிரியாகும் சிங்கமலை - தாதார்

ஜெகந்நாதம் கோனாரக்செம்மைப்பூனேசம்
மகத்தாகும் காளிமகமாய்- அகங்களெலாம்

இன்பமுடன்பார்த்தே இருதிக்கடன் முடிக்கும்
கன்மத்தொடர்க்கயாக்கண்விடுத்து - சென்மத்தே

காணுதல் இல்லாக்கவுரிசங்கர் 'காஞ்சனஞ்சேர்
வாணுதற்கங்கைவகைகிரிசென்- ராணிப்பொன்

மாமலைசூழ்த்தெண்ணீர்மனசரோவர்நிராடி
நாமஞ்சூழ்கைலை எழில் நுகர்ந்து -தாமம்சேர்

கயிலைநாதனைக்கண்டு மேகங்கள் செய்யவேண்டிய செயல்கள்

செம்மார்பன்தாள் பணிந்துசேவடியில் நீரலம்பி
சும்மாதுதிமலர்கள் தூவிடுமின் - நும்மால்

இயன்றவரைத்தோத்தரித்து ஈ.சன் அருள்பெற்று
முயன்றவரைஎன்னைமுகமன்-இயம்பிடுவீர்

கோவைத்தனிநகரில்கோவின் அருளின்றி
சேவைத்தரலாகாசென்மத்தான்-நாவின்

மிசைவந்த எண்ணம்மிலிர்ந்திடவேபாவின்
இசைவந்தபண்பால் இனிக்கும் - அசைவாளன்

சீரும் சிறப்புள்ள சீகைலைகாணிடுமோர்
ஆரும் அணியாசைஆர்த்திடுவான் - சேரின்

சிவனேநின்சீரடியில் சிந்திக்கும் ஆற்றில்
அவனே இன்றார்ப்பரிப்பான் அஞ்சல் - உவந்தருளாய்

நெஞ்சில் அவன்கொள்ளும்நின்துதிகள் வந்திலவோ
குஞ்சடம்குருவியும் கொஞ்சிட்டுத்துஞ்சும்போ

தெல்லாம் அருள்சுரப்பாய் ஏழையின் சொல் அம்பலத்தே
செல்லாதிருந்திடுமோசெப்புமெனக்-கல்லாடும்

கசிந்துருகும்வண்ணமெலாம்காரினங்காள் சொல்லி
இசிந்துருகும் என்வகைக்கே இன்று.

07-06-1932